ஜா-எல பிரதேச சபை - 2022
-----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

ஜா-எல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்று தெரிவித்திருக்கவில்லை. அபிப்பிராயம் மறுக்கப்பட்ட அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் மறுப்பு அபிப்பிராயம் ஒன்றினை வெளியிடுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளும் கணக்காய்வு அடிப்படையில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையிடுதல் எனவு பொறுப்பாகும். எவ்வாறாயினும் இந்த அறிக்கையின் அபிப்பிராயத்தை மறுக்கும் அடிப்படை பந்தியில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு

அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தை விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல் EG3.4 படி ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்வு கழிப்பதற்காக பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | 2023 இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சரியாக சமர்ப்பிக்கப்படும் என. | நியமத்தின் படி கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தை விளக்கமளித்தல் மற்றும் வழிகாட்டல் EG4.17 படி இருப்புகள் தொடர்பாக தகவல்கள் கணக்குகளில் அல்லது கணக்குகள் உடனான குறிப்புக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2023 இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது சரியாக சமர்ப்பிக்கப்படும் என. | இருப்புகள் தொடர்பாக தகவல்கள் கணக்குகளில் அல்லது கணக்குகள் உடனான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு கணக்கீடு செய்யப்பட்ட முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 866,000 தொகைக்கான இயந்திரங்களுக்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 43,300 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) குறுகிய கால முதலீடுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 551,781 இற்கான வட்டி வருமானம் ஒன்று பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல் ஆகிய வருவாயின் கீழ் காட்டுவதற்கு பதிலாக நடைமுறை அல்லாத முதலீடுகள் என காட்டப்பட்டிருந்தது. | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது நாட்குறிப்பு மூலம் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 பேரேட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் துணைப் பதிவேட்டின் படி மீதிகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 257,773,033 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இந்த மீதியை சரி செய்து கொள்வதற்காக குழுவொன்று நியமனம் செய்து அதன்படி, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகள் அல்லது அட்டவணைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதி மற்றும் விரிவான அட்டவணைகளுடன் ரூபா 4,876,351 இற்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) நிதிக் கூற்றுக்களின் 14 ஆவது குறிப்பின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவறு ரூபா 74,734,401 தொகைக்கான இருப்பு மீதியில் ரூபா 73,485,826 இற்காக அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அட்டவணைகளின் படி பௌதீக இருப்பு ரூபா 8,332,280 தொகையாக இருந்ததுடன், மீதியான ரூபா 65,156,216 தொகை இருப்புச் சீராக்கல் என காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 74,488,996 தொகைக்கான 03 கணக்கு மீதிகள் பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் நாட்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனைகள் மேற்கொள்ள முடியாதிருந்தது. | இந்த மீதியை சரி செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன்படி, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென. | பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை நிதி நிருவாக விதி | | | |
| (i) | விதி 48 | சபைக்குச் சொந்தமான இரண்டு வேலைத் தளங்களின் களஞ்சியப் பண்டங்கள் தொடர்பாக இருப்புக் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | எதிர் காலத்தில் விதிகளின் படி முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்படும் என. | குறிப்பிட்ட விதிகளின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | விதி 108(இ) | 2023 ஜூலை 14 திகதியன்று முதிர்வடைய வேண்டியிருந்த ரூபா 110,551,781 இற்கான முதலீட்டுப் பெறுமதி நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்படுவதற்கு பதிலாக நடைமுறை அல்லாதவற்றின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | - மேற்படி - |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நி.பி. 371 | 2020, 2021 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 51,040 இற்கான 3 முற்பண மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முற்பணங்களின் தீர்த்தல் தொடர்பான விபரங்கள் எதிர் காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | குறிப்பிட்ட பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 571 | 10 வருடங்களுக்கு மிகையான காலம் மிகையாக காணப்பட்ட ரூபா 68,272,520 இற்கான வைப்புக்கள் ஆதனவழிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியை சரி செய்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன், அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 22,041,963 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 40,748,205 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் சரி செய்யப்பட வேண்டிய மீதியொன்றென ரூபா 1,268,062 இற்கான இணக்கமின்மையொன்று காணப்பட்டது. | தற்போது இந்த மீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | மீதிகளை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 51,160 | 53,969 | 52,599 | 25,435 | 50,100 | 52,066 | 53,962 | 24,065 |
| (ii) | வாடகை | 28,130 | 22,153 | 14,780 | 36,195 | 26,624 | 23,419 | 10,985 | 28,822 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,656 | 4,746 | 4,746 | 29 | 4,846 | 4,635 | 4,635 | 29 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | - | - | 76,672 | - | - | - | 94,830 | - |
| | மொத்தம் | 83,946 | 80,868 | 148,797 | 61,659 | 81,570 | 80,120 | 164,412 | 52,916 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாடகை<br>கடந்த ஆண்டு இறுதியில் உள்ளவாறு சபையின் நிலுவை கடை வாடகை ரூபா 17,796,331 தொகை எனினும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா | 20 வருடங்களுக்கு பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது ரூபா 1,500.00 ஆக இருந்த கடை வாடகை ரூபா 17,500.00 வரை | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 27,556,741 தொகையாக இருந்தது. | அதிகரித்திருந்தமையால் கடை உரிமையாளர்கள் சலுகை வேண்டி கடை வாடகை செலுத்துவதை புறக்கணித்திருந்தமையால் திருத்த அலுவல்களுக்காக விலை மதிப்புத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறை சொத்துக்களின் கீழ் பெற வேண்டியவைகளுள் 5 வருட காலத்தை மிகைத்து காணப்படும் ரூபா 29,015 இற்கான கைத்தொழில் வரி மற்றும் ரூபா 857,787 இற்கான ஏனைய நிலுவை வருமானங்கள் முன்னைய ஆண்டுகளில் இருந்து தீர்க்கப்படாமல் முன்கொண்டு வந்திருந்த 6 மீதிகளைக் கொண்ட ரூபா 5,415,955 இற்கான கணக்கு மீதியொன்றும் அறவீடு செய்யப்படாமல் மாற்றம் ஏதும் இன்றி முன்கொண்டு வந்து காணப்பட்டது. | இந்த மீதியை சரி செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை மீதி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நடைமுறை பொறுப்புக்களின் கீழ் செலுத்தப்பட வேண்டியவைகளில் 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவுற்ற ஆண்டு முதல் தொங்கல் கணக்கு என்ற பெயரில் காணப்பட்ட ரூபா 236,425 இற்கான மீதியும், ரூபா 91,797,395 இற்கான கடன் கொடுத்தோர் மீதியொன்றும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் இருந்து முன் கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 4,129,122 தொகைக்கான பொது வழங்கல் கடன்கொடுத்தோர் மீதியொன்றும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதியை சரி செய்வதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய மீதிகளை தீர்த்து சரி செய்து எதிர் காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என. | - மேற்படி - |
| (இ) | 2022 பெப்ரவரி 03 திகதி திருத்த வேலைக்காக நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைத்திருந்த மோட்டார் வாகனம் ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 16 திகதி வரை திருத்த வேலை மேற்கொண்டு சபைக்கு ஒப்படைத்திருக்கவில்லை. | வாகனத்தின் திருத்த வேலைக்குரிய மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கொடுப்பனவு மேற்கொள்வதற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மோட்டார் வாகனத்தை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற நிலையான சொத்துக்கள் ஆகிய 31 காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையினை தீர்த்துக்கொண்டு மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள 44 கட்டிடங்களின் 13 தற்போது சரி செய்யப்பட்டுள்ளது. மீதியையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணிப்பீட்டுச் சபையினால் இனங் கண்டிருக்காத சபைக்கு சொந்தமான 02 காணித் துண்டுகளை சரியாக இனங் காணல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இந்த ஆதனங்களில் 06 தொகை இனங் கண்டு பதிவேடுகள் சரி செய்யப்பட்டது. மீதியான 02 ஆதனங்களை விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த 16 விலையாட்டுத் திடல்கள், 17 மயானங்கள், 13 சனசமூக நிலையங்கள், 51 கிணறுகள் மற்றும் 36 காணிகள் ஆகிய ஆதனங்களுக்கு காணி உறுதி அல்லது நில அளவைப் படத்தின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ஆதனக் கணிப்பீட்டின் மூலம் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதிவேடுகள் சரியாக நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் என கணக்குகளில் காட்டப்பட்டிருந்த தற்போது பல வருட காலம் முதல் செயற்படாமல் காணப்பட்ட மிட்சுபிசி டபல் கப் வண்டி தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூறுவிலை அழைக்கும் போது ஒரு நிறுவனத்தினாலேனும் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் மீண்டும் கூறுவிலை அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தொடர் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பெறுகை செய்முறைக்கு இணங்க திருத்த வேலை மேற்கொள்ள வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2020 திசெம்பர் 22 திகதிய LGD/GM/1/7/பொது/2020 கொண்ட கடிதத்தின் பிரகாரம் கணினி மென்பொருள் கொள்வனவு செய்யும் போது முறையான பெறுகை செயல் நடவடிக்கை முறையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டியிருந்த போதிலும், அலுவலக விடயங்கள் கணினி மயப்படுத்தும் குறிக்கோளுடன் தகைமையுடைய விலைகூறல்தாரர் தெரிவு செய்வதற்காக ஆய்வொன்று மற்றும் கண்டறிதல் ஒன்று மேற்கொள்ளாமல் வழிகாட்டல்களுக்கு முரணாக இரண்டு | இதற்காக வரையறுக்கப்பட்ட போட்டி கூறுவிலைகள் அழைத்தல் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. மேலும், தற்போது நெக்பா மென்பொருள் முறைமை மூலம் வீதவரி, பலவின வருமானங்கள், கணக்குகள், இருப்பு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் ஆகிய விடயப் பரப்பு வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. | பெறுகை வழிகாட்டலுக்கு இணங்க கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் ரூபா 10,030,000 தொகைக்கான வீதவரி முகாமைத்துவம், பலவின வருமான முகாமைத்துவம், கணக்கீட்டு முகாமைத்துவம் மற்றும் இருப்பு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பாக கணினி மென்பொருள் முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ஊழியர் கடன் | | |
| I. | 2020 ஆகஸ்ட் 24 திகதிய LGD/09/2019/(I) இலக்கம் கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தருக்கான முற்பண “பீ” கணக்கின் படிவத்தின் படி எல்லைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் போது முற்பண எல்லைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என. | எல்லைகளை இனங் கண்டு அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| II. | ஊழியர் கடன் மீதிக்குரிய அட்டவணைகள், ஊழியர் கடன் பதிவேட்டு மீதிகளுடன் கண்டறியப்பட்ட ரூபா 186,200 இற்கான வித்தியாசம் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு சரி செய்திருக்கவில்லை. | இது தொடர்பாக மீண்டும் பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து கணக்காய்விற்கு சமர்பிக்கப்படும் என. | வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| III. | அறவீடு செய்ய முடியாத ஊழியர் கடன் என ரூபா 291,799 இற்கான கடன் மீதியொன்று முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட போதிலும், அதற்கான விரிவான அட்டவணையொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்த பந்தி உட்பட 07 கணக்குகள் சரி செய்து கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கையின் படி எதிர் காலத்தில் இந்த மீதியை சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரிவான அட்டவணைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |